தகவல் ஏடு

# ‘இனப் பாகுபாடு சட்ட’த்தின் கீழான முறைப்பாடுகள்

## ‘‘இனப் பாகுபாடு சட்டம்’ என்பது என்ன?

உங்களுடைய இனம், நிறம், மரபு, தேசிய அல்லது இனப் பூர்வீகம் அல்லது குடிவரவு நிலை ஆகியவற்றின் காரணமாக உங்களை நியாயமற்ற முறையில் நடத்துவதை சட்ட விரோதமானதாக *‘இனப் பாகுபாடு சட்டம் 1975’* (Cth) (the RDA) ஆக்குகிறது.

இனரீதி வெறுப்பையும் இது சட்ட விரோதமானதாக ஆக்குகிறது.

## இந்த சட்டம் எப்போது பயன்படுத்தப்படலாம்?

பொது வாழ்க்கையின் பல பகுதிகளில் நியாயமான நடத்துமுறையைப் பெற நீங்கள் RDA (‘இனப் பாகுபாடு சட்டம்’) -ஐப் பயன்படுத்தலாம்:

- **வேலை -** வேலை ஒன்றைப் பெறல், வேலை ஒன்றிற்கான நிபந்தனைகள், பயிற்சி, பதவிஉயர்வு, வேலையிலிருந்து நீக்கப்படல்.
- **கல்வி -** தனியார் அல்லது அரச பாடசாலை,கல்லூரி அல்லது பல்கலைக் கழகத்தில் சேர்தல்
- **தங்குமிட வசதி -** வீடு அல்லது குடியிருப்புப் பிரிவு (unit) ஒன்றை வாடகைக்கு எடுத்தல் அல்லது வாங்குதல்
- **சேவைகளைப் பெறல் அல்லது பயன்படுத்துதல் -** வங்கி அல்லது காப்பீட்டுச் சேவைகள், அரசுத் துறைகளால் வழங்கப்படும் சேவைகள், போக்குவரத்து அல்லது தகவல்தொடர்பு சேவைகள், சட்டதரணிகள், மருத்துவர்கள் அல்லது கைவினைஞர்கள் போன்றவர்களால் அளிக்கப்படும் தொழில்ரீதியான சேவைகள், உணவகங்கள், கடைகள் அல்லது பொழுதுபோக்கு ஸ்தலங்கள் ஆகியவற்றால் அளிக்கப்படும் சேவைகள்.

- **பொது இடங்களைப் பாவிக்கும் வசதி -** பூங்காக்கள், அரச அலுவலகங்கள், உணவகங்கள், ஹோட்டல்கள் அல்லது அங்காடி மையங்கள் போன்ற இடங்கள்

## இனரீதிப் பாகுபாடு என்பது என்ன?

ஒருவருடைய இனம், நிறம், மரபு, தேசிய அல்லது இனப் பூர்வீகம் அல்லது குடிவரவு நிலை ஆகியவற்றின் காரணமாக அவர் அதே சூழ்நிலையில் இருக்கும் இன்னொருவரை விட அனுகூலம் குறைந்த விதத்தில் நடத்தப்படும்போது இனரீதிப் பாகுபாடு நிகழ்கிறது. உதாரணமாக, ஒருவர் ஒரு குறிப்பிட்ட இனப் பின்புலத்தினைச் சேர்ந்தவர் அல்லது தோல் நிறம் கொண்டவர் என்ற காரணத்தினால் நிலச்சொத்து முகவர் ஒருவர் அவருக்கு வாடகைக்கு வீ டு ஒன்றை விடுவதற்கு மறுக்கிறார் என்றால் அது 'நேரடிப் பாகுபாடு' ஆகும்.

அனைவருக்கும் ஒரே மாதிரியான விதிமுறை அல்லது கொள்கைத் திட்டம் இருக்கும் நிலையில், ஒரு குறிப்பிட்ட இனம், நிறம், மரபு, தேசிய அல்லது இனப் பூர்வீகம் அல்லது குடிவரவு நிலை ஆகியனவற்றைக் கொண்டவர்கள் மீது அந்த விதிமுறை அல்லது கொள்கைத் திட்டமானது நியாயமற்ற விளைவினை ஏற்படுத்தும்போதும் இனரீதிப் பாகுபாடு நிகழ்கிறது. இது 'மறைமுகப் பாகுபாடு' எனப்படும். உதாரணமாக, தொழிலாளர்கள் தொப்பிகள் அல்லது தலையணிகள் எதையும் அணியக் கூடாது என்று ஒரு நிறுவனம் விதித்தால் இது 'மறைமுகப் பாகுபாடு' என்று கருதப்படலாம், ஏனெனில், சில இனப் பின்புலங்களைச் சேர்ந்தவர்கள் மீது விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியம் இருக்கும்.

## இனரீதி வெறுப்பு என்பது என்ன?

ஒரு நபர் அல்லது குழுவினரது இனம், நிறம், தேசிய அல்லது இனப் பூர்வீகம் ஆகியவற்றின் அடிப்படையில் பொது இடம் ஒன்றில் **புண்படுத்தும், அவமதிக்கும், அவமானப்படுத்தும் அல்லது அச்சுறுத்தும்** விதத்தில் ஏதாவது செய்வது சட்ட விரோதமானதாகும்.

இனரீதி வெறுப்பிற்கான உதாரணங்களில் பின் வருவன அடங்கலாம்:

- 'ஈ-ஃபாரம்'கள் (e-forums) 'ப்லோக்'கள் (blogs) சமூக வலைத்தொடர்புத் தளங்கள் மற்றும் காணொளிப் பகிர்வுத் தளங்கள் ஆகியவற்றில் வெளியிடப்படும் இனரீதித் தூசன விடயங்கள்

- செய்தித்தாட்கள், சஞ்சிகைகள், விளம்பர ஏடுகள் அல்லது விளம்பரத் துண்டுகள் போன்ற வெளியீடுகளில் தோன்றும் இனரீதித் தூசனக் கருத்துரைகள் அல்லது படங்கள்

- பொதுக்கூட்டம் ஒன்றில் இடம்பெறும் இனரீதித் தூசனப் பேச்சுக்கள்
- கடை, வேலைத்தளம், பூங்கா, பொதுப்போக்குவரத்து அல்லது பாடசாலையில் இடம்பெறும் தூசனக் கருத்துரைகள்
- விளையாட்டு வீரர்கள், பார்வையாளர்கள், பயிற்றுநர்கள் அல்லது அலுவலகர்களால் செய்யப்படும் தூசனக் கருத்துரைகள்.

## இன அடிப்படையிலான புண்படுத்தும் நடத்தை எப்போது சட்ட விரோதமானது அல்ல?

சுதந்திரமாகத் தொடர்பாடல் கொள்வதற்கான (‘பேச்சு சுதந்திரம்’) உரிமையையும் இனரீதி வெறுப்பிற்கு ஆளாகாமல் இருப்பதற்கான உரிமையையும் சமநிலைப்படுத்துவது RDA -யின் நோக்கமாகும். பின் வரும் செயல்கள் **‘நியாயமான முறையிலும் நல்ல எண்ணத்திலும்’** செய்யப்பட்டால் அவை சட்ட விரோதமானவை அல்ல என்று RDA உரைக்கிறது:

- **ஒரு கலை ஆக்கம் அல்லது செயற்பாடு -** உதாரணமாக, ஒரு நாடகத்தில் கதாபாத்திரம் ஒருவரால் வெளிப்படுத்தப்படும் இனரீதித் தூசனமான நடத்தைப்பாங்குகள்.
- **உண்மையான கல்வியறிவு அல்லது விஞ்ஞான நோக்கங்களுக்காகச் செய்யப்படும் ஒரு கூற்று, வெளியீடு, கலந்துரையாடல் அல்லது விவாதம் -** உதாரணமாக, குடிவரவு, பற்கலாசாரம், அல்லது குறிப்பிட்ட குழுவினருக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்.
- **பொது நலன் குறித்த ஒரு விடயத்தைப் பற்றிய நியாயமான மற்றும் துல்லியமான அறிக்கை ஒன்றை வெளியிடல் -** உதாரணமாக, இனரீதித் தூசனமானதொரு நடத்தையைப் பற்றிய நியாயமான செய்தித்தாள் அறிக்கை ஒன்று.
- **நியாயமான கருத்துரை ஒன்றினை ஏற்படுத்துதல்**, அந்தக் கருத்துரையானது அதை ஏற்படுத்துபவரது உண்மையான நம்பிக்கையின் வெளிப்பாடாக இருந்தால்.

## பாகுபாடு அல்லது இனரீதி வெறுப்பிற்கு நான் ஆளானால் என்னால் என்ன செய்ய இயலும்?

இதில் சம்பந்தப்பட்டுள்ள நபர் அல்லது நபர்களுடன் இதைப் பற்றி நீங்கள் நேரடியாகக் கேள்வி எழுப்பலாம்.

இதன் மூலம் இதற்குத் தீர்வு கிடைக்கவில்லை என்றால், அல்லது இப்படிச் செய்வது உங்களுக்குச் சங்கடமாக இருந்தால், நீங்கள் 'ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணைய'த்திடம் முறைப்பாடு செய்யலாம். சட்டதரணி, வக்காலத்தாளர் ஒருவரை அல்லது ஒரு தொழிற்சங்கத்தினை உங்கள் சார்பாக முறைப்பாடு செய்யச் சொல்லிக் கேட்கலாம்.

'ஆணைய'த்திடம் முறைப்பாடு செய்வதற்குச் செலவு ஏதும் இல்லை.

உங்களுடைய முறைப்பாடானது எழுத்து வடிவில் இருக்கவேண்டும். நீங்கள் பூர்த்தி செய்து, அஞ்சல் அல்லது தொலைநகல் மூலம் அனுப்பக்கூடிய படிவம் ஒன்று 'ஆணைய'த்திடம் உள்ளது, அல்லது எமது வலைதளத்தில் இணையவழியில் நீங்கள் முறைப்பாடு ஒன்றைனைச் சமர்ப்பிக்கலாம். உங்களுடைய முறைப்பாட்டினை எழுத்து வடிவில் உங்களால் தாக்கல் செய்ய இயலவில்லை என்றால், எம்மால் உங்களுக்கு உதவ இயலும்.

உங்களுடைய முறைப்பாடு செல்லுபடியாகக்கூடியதாக இருப்பதற்கு, அது வாதத்திற்கு ஏற்றதாக இருத்தல் வேண்டும், நீங்கள் விபரிக்கும் விடயங்கள் சட்ட விரோதமான பாகுபாட்டினைப் பற்றியதாக இருத்தல் வேண்டும், மற்றும் நடந்தது என்ன, எப்போது மற்றும் எங்கே அது நடந்தது, மற்றும் இதில் சம்பந்தப்பட்டது யார் என்பதைப் பற்றியப் போதிய விவரங்களை நீங்கள் கொடுக்கவேண்டும்.

புகார் ஒன்றினை எந்த மொழியிலும் செய்யலாம். மொழிபெயர்ப்பாளர் அல்லது மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால், அதை எம்மால் ஒழுங்கு செய்ய இயலும்.

## மேலதிகத் தகவல்களை நான் எங்கிருந்து பெறலாம்?

பின் வருவன 'ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணைய'த்தின் தொடர்பு விபரங்களாகும்:

**தொலைபேசி**
'தேசிய தகவல் சேவை': 1300 656 419 அல்லது (02) 9284 9888
தொலைத் தட்டச்சு (TTY) 1800 620 241 (கட்டணம் இல்லாதது)
தொலை நகல்: (02) 9284 9611

**அஞ்சல்:**
GPO Box 5218
Sydney NSW 2001

**இணைய வழி:**

மின்னஞ்சல்: infoservice@humanrights.gov.au

வலைத்தளம்: www.humanrights.gov.au

www.humanrights.gov.au/complaints_information/online_form/index.html எனும் வலைத்தளப் பக்கத்திற்குச் சென்று இணைய வழியில் நீங்கள் முறைப்பாடு ஒன்றினைச் செய்யலாம்.

நீங்கள் செவித்திறன் அற்றவராகவோ,செவித்திறன் குறைபாடு உள்ளவராகவோ இருந்தால், 1800 620 241-இல் TTY-ஐ அழைத்து எம்முடன் தொடர்புகொள்ளலாம். உங்களுக்கு 'ஆஸ்லன்' மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் தேவைப்பட்டால், உங்களுக்காக இதை எம்மால் ஒழுங்கு செய்ய இயலும்.

நீங்கள் பார்வைத் திறன் அற்றவராகவோ, பார்வைக் குறைபாடு உள்ளவராகவோ இருந்தால், உங்களது வேண்டுகோளின் பெயரில் மாற்று வழிகளில் எம்மால் உங்களுக்குத் தகவல்களை அளிக்க இயலும்.

## இனரீதி வெறுப்பு முறைப்பாடுகளுக்கான மற்ற தொடர்புகள்

தூசனமான ஊடகச் செய்திகள், ஒலியொளிபரப்பல்கள் அல்லது இணையவழி அடக்கங்கள் ஆகியவற்றைப் பற்றி நீங்கள் கவலைகொண்டிருந்தால், நீங்கள் 'ஆஸ்திரேலியத் தொலைத்தொடர்பு மற்றும் ஊடக ஆணைய'(Australian Communications and Media Authority (ACMA))த்திற்கு, விளம்பரங்களைப் பற்றி 'விளம்பரத் தரநிலை வாரிய(Advertising Standards Board)த்திற்கு அல்லது செய்தித்தாள் செய்திகளைப் பற்றி 'ஆஸ்திரேலியப் பத்திரிகைத்துறைக் குழு'(Australian Press Council)விற்கு முறைப்பாடு செய்யலாம். குறிப்பிட்ட ஊடக அமைப்பின் பதிப்பாசிரியர் அல்லது மேலாளருக்கும் நீங்கள் முறைப்பாடு செய்யலாம்.

அயலவர்களது தூசன நடத்தையைப் பற்றி நீங்கள் கவலைகொண்டிருந்தால், பிரச்சினைக்குத் தீர்வு காண 'சமூக நீதி மையம்' ஒன்றை நீங்கள் அணுகலாம், அல்லது பொது வீட்டுவசதியில் நீங்கள் வசித்துவந்தால் 'வீட்டுவசதித் திணைக்கள'(Department of Housing)த்திற்கு நீங்கள் முறைப்பாடு செய்யலாம்.

**வன்முறையால் நீங்கள் அச்சுறுத்தப்பட்டால் அல்லது வன்முறைத்தனமாகத் தாக்கப்பட்டால், காவல்துறையினரிடம் செல்லுங்கள்.**

## பொதுவான சட்ட அறிவுரை

முறைப்பாடு ஒன்றைச் செய்வதைப் பற்றி நீங்கள் யோசித்துக்கொண்டிருந்தால், நீங்கள் சட்ட ஆலோசணை பெறுவதை அல்லது உங்களுடைய தொழிற்சங்கத்துடன் தொடர்புகொள்வதைக்

கருத்தில் கொள்ளக்கூடும். பாகுபாடு மற்றும் உபத்திரவத்திற்கு ஆளாக்கப்படல் ஆகியவற்றைப் பற்றிய இலவச அறிவுரைகளை சமூக சட்ட சேவைகளால் அளிக்க இயலும். உங்களுக்கு அண்மையிலுள்ள சமூக சட்ட மையத்தின் தொடர்பு விபரங்களை www.naclc.org.au/directory எனும் வலைத்தளப் பக்கத்தில் காணலாம்.

**மறுப்புக்கூற்று: இந்தத் தகவல் ஏட்டில் உள்ள தகவல்கள் ஒரு வழிகாட்டி என்ற நோக்கத்தில் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. சட்ட ஆலோசனைக்கு இது ஒரு மாற்று ஆகாது.**